[1978 மார்ச் 16

எடமேலையூரில் வீட்டுமனைகள் ஒப்படை.

*586— வினா. திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நீடாமங்கலம் பஞ்சாயத்து ஒன்றியத்தைச் சேர்ந்த எடமேலையூர் பஞ்சாயத்திற்குட்பட்ட அம்மணி அம்மன் குளத்தின் தென் கரையில் குடியிருப்போருக்கு அந்த இடங்களை பட்டா செய்து கொடுக்கும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : ஆம்.

திரு. துரை. கோவிந்தராசன் : தலைவரவர்களே, கிராமப் புறங்களில் இருக்கிற குளங்களின் கரையோரங்களில் குடியிருப்பவர்கள் கொஞ்ச காலத்திற்குப் பின்னால் குளம் இல்லாத அளவுக்கு தூர்த்து விடுகிறார்கள். அதனால் கிராமப் புறங்களில் இருக்கிற சிறு விவசாயிகளின் கிணறுகளில் தண்ணீர் ஊற்று இல்லாமல் போய் விடுகிறது. குளங்களில் தண்ணீர் இருந்தால் தான் அந்த வட்டாரத்தில் வெட்டப்படும் கிணறுகளில் தண்ணீர் ஊற்று இருக்கும். அதனால் ஏரி, குளங்கள் கரையோரங்களில் குடியிருப்பவர்களுக்கு அரசு மாற்று இடங்களைக் கொடுத்து, ஏரி, குளங்கள் தூர்ந்து போகாமல் பார்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டம், மன்னார்குடி வட்டம், எடமேலையூர் கிராமம் ஆர். எஸ். எண். 489-ல் உள்ள நிலத்தின் மொத்த அளவு 5.56 ஏக்கர். அதில் சுமார் 1.56 ஏக்கர் நிலத்தை 16 பேர்கள் குடிசைகள் கட்டி ஆக்கிரமித்துள்ளனர். அவர்கள் அனைவரும் வீடோ, நிலமோ இல்லாத ஏழைகளாவர். அவர்கள் 'அம்பலகாரன்', 'கள்ளர்' குலத்தைச் சேர்ந்தவர்கள். இந்த ஆக்கிரமிப்பு 10 ஆண்டுகளாக இருப்பதாகத் தெரிகிறது. இந்த ஆக்கிரமிப்பு ஆட்சேபகரமானதாகக் கருதப்பட்டு, அபராதமும் விதிக்கப் பட்டு வருகிறது. குளம் புறம்போக்காக உள்ள இந்த நிலத்தை ''நத்தம் புறம்போக்காக'' வகை மாற்றம் செய்து வீட்டு மனைகளாக மேற்படி ஆக்கிரமிப்பாளர்களுக்கு அளித்து முறைப் படுத்துவதற்கான செயற்குறிப்பு ஒன்று உள்ளதாக தஞ்சாவூர் கூடுதல் மாவட்ட ஆட்சியாளர் தெரிவித்துள்ளார். எனினும், இது வரையில் அவ்வாறு ஆக்கிரமிப்பாளர்களுக்கு இந்த நிலத்தை வீட்டு மனைகளாக ஒப்படை செய்வதற்கான ஆணை ஏதும் பிறப் பிக்கப்படவில்லை.

1978 மார்ச் 16]

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்: சார், இப்படிப் பட்ட ஊருணிகள் பாசனத்திற்கு ஏற்றதாக இருக்கின்றன. ஏற்கெனவே பாசனவசதி கிணறுகள் இல்லாத இடங்களில், கதிர் அறுவடைக் காலத்தில் ஒரு தண்ணீர், இரண்டு தண்ணீர் தட்டுப் பாட்டினுல் கதிர் அறுவடை ஆகாமல் போகும் சூழ்நிலை ஏற் பட்டால் இப்படிப்பட்ட ஊருணிகளிலிருந்து தண்ணீர் எடுத்துக் கொள்ளலாம் அல்லது கிணறுகளை வெட்டி சிறிது ஆழத்திலேயே தண்ணீர் எடுத்துக் கொள்ளலாம். அதைக் கருத்திற் கொண்டு தான் முந்திய காலத்தில் ஏராளமான ஊருணிகளை பல இடங் களில் அமைக்க ஏற்பாடு செய்திருக்கிறது. ஆகவே, கிராமப் புறங்களில் இருக்கின்ற ஊருணிகள் ஆக்கிரமிப்பாளர்களாலோ அல்லது வேறு வகையிலோ ஆக்கிரமிக்கப்படாமல் இருப்பதற்கும் புதிய ஊருணிகளை அமைப்பதற்கும் ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, மாண்பு மிகு உறுப்பினர் அவர்களின் கருத்துக்களை எல்லாம் அடிப்படை யாக வைத்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

முளகிரிப்பட்டு கிராம முன்சீப்.

*587— வினு. திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :

இந்த வருடத்தில் (1977) வட ஆற்காடு மாவட்டத்தில் செய்யாறு தாலூக்கா முளகிரிப்பட்டு கிராம மணியக்காரரால் பணம் கையாடல் செய்யப்பட்டது உண்மையா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : ஆம்.

சாத்தனூர் பிரதான கால்வாய் மராமத்து.

*588— வினு. திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :

சாத்தனூர் அணையின் பிரதானக் கால்வாயினை பழுதுபார்த்து கால்வாயின் கடைசிப் பகுதியிலுள்ள நிலங்கள் வரை தண்ணீர் தடையின்றி பாய்வதற்கு வசதி செய்யும் உத்தேசம் ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

TRUTH ALONE TRIUMPHS